மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2022 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | வேலு | நாள் | 04.12.2024 |
| தகப்பனார் பெயர் | முத்துக்கவுண்டர் | | |

**8 ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

4) 7 ம் பிரதிவாதி சித்தயனை எதற்காக இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றால், சித்தயனை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை. 8 ம் பிரதிவாதி பெருமாயியை எதற்காக இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால், என் பாக சொத்தை கிரயம் பெற்றுள்ளதால் இவ்வழக்கில் சேர்த்துள்ளேன். 8 ம் பிரதிவாதிக்கு நான் எந்த சொத்தையும் கிரயம் கொடுக்கவில்லை என்றால், சரிதான். என் பாக நிலத்தை  கிரயம் பெற்றதால் சேர்த்துள்ளேன்.

5) எவ்வாறு 8 ம் பிரதிவாதி என் பாக நிலத்தை கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியும் என்றால், 8 ம் பிரதிவாதி என் நிலத்தில் நுழைந்து சொத்து தனக்கு சொந்தம் என கூறிய போதுதான் எனக்கு தெரியும். (சாட்சி 8 ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் மேற்படி சமயத்தில் 8 ம் பிரதிவாதியுடன் இருந்ததாக கூறுகிறார்.) அதுநாள் வரையில் கடந்த 2006 ம் வருடத்திலிருந்து 8 ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயப்படி அனுபவித்து வரும் விவரம் எனக்கு தெரியாதா? என்றால், தெரியாது.

6) வா.சா.ஆ.4 பட்டாவில் 3 வது பெயராக பழனியப்ப கவுண்டர் மனைவி பெருமாயி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி கூட்டுப்பட்டாவில் பெருமாயி பெயர் சேர்க்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால், எப்போது சேர்த்தார்கள் என எனக்கு தெரியாது. மேற்படி கூட்டுப்பட்டாவில் 8 ம் பிரதிவாதியின் பெயர் சேர்க்கப்பட்ட விவரம் எனக்கு தெரிய வந்தது என்றால், 2022 ம் வருடத்தில் எனக்கு தெரியவந்தது. அவ்வாறு எனக்கு 2022 ம் வருடத்தில் எனக்கு தெரியவந்ததாக நான் சொல்லும் நிலையில், அது குறித்து நான் ஏதேனும் விசாணை செய்தேனா என்றால், இல்லை.

7) 8ம் பிரதிவாதி பெயர் 30.01.2007ம் தேதியிலேயே வட்டாட்சியரின் உத்தரவுப்படி கூட்டுப்பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ள விவரம் தெரிந்துகொண்டே நான் 2022ம் வருடம் வரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளேன் என்றால், சரியல்ல. 2022ம் வருடத்தில் அ.வ.எண்.17/2022 என்ற வழக்கினை 8ம் பிரதிவாதி தாக்கல் செய்து, அதில், 1ம் பிரதிவாதிக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட போதுதான் எனக்கு மேற்படி கிரயம் குறித்தே தெரியவந்தது என நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

8) மேற்படி அழைப்பாணை பெற்ற பின்பும், மேற்படி 8ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள கிரயம் குறித்து தெரிந்த பின்பும், நான் ஊர் பெரியவர்கள் மற்றும் மத்தியஸ்தர்களை வைத்து 8ம் பிரதிவாதியிடம் மேற்படி கிரயத்தை ரத்து செய்து கொடுக்க கோரினேன் என்றால், அவ்வாறு பேச்சுவார்தை எதுவும் நடத்தவில்லை. 20.03.2022ம் தேதிக்கு முன்புவரை 8ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் பெற்றுக்கொண்டுள்ளார் என்ற விவரமே எனக்கு தெரியாது என நான் சொல்கிறேனா என்றால், ஆமாம்.

9) 8ம் பிரதிவாதி 10.03.2021ம் தேதியில் வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்ததன் அடிப்படையில் கடந்த 03.12.2021ம் தேதியில் நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் தாவா சொத்திற்கு வந்தார்கள் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி தேதியில் வருவாய் துறையினர் தாவா சொத்தை அளந்தபோது நான் அளக்க கூடாது என பிரச்சனை செய்தேன் என்றால், தேதி சரியாக நினைவில்லை. ஆனால், ஒரு முறை 8ம் பிரதிவாதியின் வழக்கறிஞரும், நில அளவையரும், கிராம நிர்வாக அதிகாரியும் தாவா சொத்திற்கு வந்தார்கள் அப்போது நான் அவர்களது கிரயம் சொத்தை மட்டும் அளந்து கொள்ளவேண்டும் என கூறினேன். பிரச்சனை எதுவும் செய்யவில்லை.

10) அன்றைய தேதியில் நில அளவையரும், கிராம நிர்வாக அதிகாரி ஆகியோர் காவல் துறை உதவியுடன் பிரச்சனைக்குரிய நிலத்தை அளந்தார்கள் என்றால், சரிதான். 03.12.2021ம் தேதியிலேயே 8ம் பிரதிவாதியின் பெயரில் தாவா சொத்து கிரயம்

ஆகியுள்ள சங்கதி எனக்கு தெரியும் என்றாலும், ஆனால், மேற்படி வழக்கில் நீதிமன்ற அழைப்பாணை கிடைக்கபெற்ற பின்புதான் கடந்த 20.03.2022 ம் தேதியில் மேற்படி 8 ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள கிரயம் குறித்து எனக்கு தெரியவந்ததாக நான் சொல்வது பொய்யானது என்றால், சரிதான்.

(8 ம் பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.